


# பாலியர் நேசன்.

நானே நல்ல மேய்ப்பன்.

குழந்தைகளை என்னிடத்தில் வரவிடுங்கள், தடைபண்ணாதிருங்கள்.

[சங்கியை ௪. ௩ம் புத்தகம்.] யாழ்ப்பாணம் ௧௮௬௫ம் ௵ சித்திரை ௴. இதன்விலை வருஷம் ஒன்றுக்கு, அரை ரூபாய்.


### பத்திரத்தின் விலை.

| | | | | |
|---|---|---|---|---|
| ஒரு பிரதிவாங்குவார்க்குவிலை | | | சி. | க |
| ஒரேமுறையில் ௧௦ | " | " | " | ௬ |
| ௨௦ | " | " | " | ௧௧ |
| ௨௫ | " | " | " | ௨௧ |
| ௫௦ | " | " | " | ௪௦ |
| ௧௦௦ | " | " | " | ௭௫ |

தபாற்செலவு பிறம்பாய்வரும்.

### SUBSCRIPTIONS.

| 1865. | £ | s. | d. |
|---|---|---|---|
| Mr. P. Marian for Postage | | 0 | 6 |
| " " donation | | 2 | 1½ |
| Rev. J. C. Smith | | 2 | 0 |
| Mr. A. Gabriel Paulick | | 1 | 6 |
| Mr. L. Spaulding | | 1 | 6 |
| " Marimuttu | | 1 | 6 |

### சித்திரைமாசம்.

சித்திரையாகிய ஏப்பிரில் மாசப்பேர் தோன்றுகிறதென்று அருத்தங்கொள்ளும் ஏபிரிலிஸ் (Aprilis) என்ற லத்தீன் சொல்லிலிருந்து உண்டானது. இந்தமாசத்தில் புஷ்பங்கள் மிகுதி. இம்மாதத்தில் சூரியன் மேட இராசியிற் பிரவேசிக்கிறதென்று சொல்லுகிறார்கள். அது சரியல்ல. ஐரோப்பிய வான சாஸ்திரிகள் இங்கிலிஷ் பங்குனிமாதம் ௨௧ ந் திகதி மேட இராசியிற் பிரவேசிக்கிறதென்று எண்ணலினாலும் சூத்திரக் கருவிகளினாலுங் கண்டறிந்திருக்கிறார்கள். இம்மாதத்தில் முதற்றிகதியை தமிழருடைய லௌகீக வருஷப்பிறப்பென்று கொண்டாடி எட்டுநாளாக வீட்டுக்குவீடு சென்று இனத்தாரையும் பிறரையும் சந்தித்து தாம்பூலமருந்தி விருந்துண்டு மற்பிடி பாடியோட்டம் பந்தடி முதலிய விளையாட்டுக்களைக் கண்குளிரப் பார்த்து மகிழ்ச்சிகொள்ளுவார்கள். விளையாட்டுக்களிகளிற் பெருஞ் சண்டைகளுண்டாக அநேகருடைய அவயவங்களிற் காயமுண்டாக நீதித்தலங்களுக்கு சென்றுகஷ்டமடைவார்கள்.

இம்மாதத்தில் அநேக சைவருடைய கோவில்களில் திருவிழா நடத்தப்படும். சித்திராபௌர்ணமியில் சித்திரகுத்தன் என்பவருடைய கதையை கோயில்களில் வாசித்து தெருக்களிலும், சந்திகளிலும், மடங்களிலும் யாசகருக்கு சித்திரைக்கஞ்சி வார்ப்பார்கள். சித்திரைக்கதையில் இன்னவின்ன பாவஞ்செய்தோர் இன்னவின்ன ஆக்கினைப்படுவார்களென்று சொல்லியிருக்கிறது. உதாரணமாக, அரைத்த குழவியை அம்மியோடே சார்த்தப்படாதென்றுங் குத்தின உலக்கையைக் கூரையோடே சார்த்தப்படாதென்றும் அப்படிச் செய்வோருக்கு நரகம் என்றுஞ் சொல்லுகின்றது. பிள்ளைகளே, வேதபோதனைகளுடன் இவைகளை ஒத்துப்பாருங்கள். பாவமாவதின்னதென்பதை எவ்விதமாகச் சித்திரைக்கதை சொல்லுகின்றது. நமது சத்தியவேதம் எவ்விதமாகச் சொல்லுகின்றது. அறியாப் பேதைகளை ஏய்ப்பதற்கு சித்திரைக்கதை நற்கதைதான்.

### யாமிக்காதீவின் கலகம்.

பிள்ளைகளே, இந்நாட்களில் யாமிக்காதீவில் காப்பிரிகள் கலகம்பண்ணினார்கள் என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். அதின் காரணம் என்னவென்று தெரியுமா. முன் யாமிக்காதீவு எங்கேயென்று சொல்லிப் பின்பு கலகத்தின் மூலம் சொல்லுவோம்.

௧௪௯௪ம் ஆண்டு கொலும்பஸ் என்பவர் இத்தீவைக் கண்டார். அவர் கண்டு ௰௫ வருஷத்தின் பின் ஸ்பானியர் அதிற் குடியேறினார்கள். ஆனால் ௧௬௫௫ம் ஆண்டு ஒலிவர்குறம்வெல் என்பவரின் நாட்களில் இங்கிலிஷ்காரர் அதைப் பிடித்தார்கள். இது மேற்குஇந்திய தீவுகளுடன் சேர்ந்தது. வடஅட்சம் ௰அ ம் பாகையிலும் குடதேசாந்திரம் ௭௭ம் பாகையிலும் இத்தீவு இருக்கின்றது. ௱௫௰ மைல் நீளமும் ஏறக்குறைய ௫௰ மைல் அகலமுமுள்ளது. இத்தீவின் நடுவாக கிழக்கிலிருந்து மேற்காக ஒரு பெரிய மலையிருக்கிறது. சீனி, நீலக்கட்டி, பஞ்சு, கோப்பி மிகுதியாக இங்கேயுண்டு. அன்னதாழை, புளி, கொய்யா, அணிநுணா, தெங்கு, தேன்ரோடை, எலுமிச்சை, பெருவெலுமிச்சை, முந்திரிகை, அத்தி, மாதழை முதலிய மரங்களும் மிகுதியாக உண்டு.

இத்தீவில் கறுத்தவர்கள், வெள்ளைக்காரரென இருவகையானமனுஷருண்டு. ஒருசாதியாருச்சநிலையிலும், மற்றவர்கள்தாழ்ந்தநிலையிலும் நிற்பதே கலகத்துக்குக் காரணம் என எண்ணுகிறார்கள். ௬ இலட். ௭௰ம் குடிகளிருக்கிறார்கள். இதில் ௩௰ம்பேர் வெள்ளைக்காரர். இப்பொழுது அத்தீவிலிருக்கப்பட்ட காப்பிரிகளின் முற்பிதாக்கள் அடிமைகளாக இருந்தார்கள். ஏறக்குறைய ௩௰ வருஷத்திற்குமுன் இங்கிலிஷ் அரசாட்சியார் சிறைகளை இஷ்டமாக்கினார்கள். அவ்விடத்திலுள்ள குருமாரின் சற்போதனையாலும் அரசாட்சியாரின் தயாளகுணத்தினாலும் ஒவ்வொரு காப்பிரியுந் தங்கள் வேலைகளை முயற்சியுடன் செய்துவந்தார்கள். இந்தக் காப்பிரிகளை இங்கிலிஷ்காரருக்குரிய சகல உரித்துகளும் அரசாட்சியார் உடந்தையாக்கினதால் அதிகாரஞ்செலுத்தும் வெள்ளைக்காரர் அவர்களைத் தாழ்த்தவேண்டுமென்ற சிந்தையுடன் கொடும் வரிகளையுந் தாங்குதற்கரிய சுமைகளையும் ஏற்படுத்தினார்கள். இதினால் ஒருவரோடொருவர் எரிந்து புகைந்து திரிந்தார்கள். இதுவே கலகத்துக்குமூலம் என்று இங்கிலிஷ் பத்திரிகையில் வாசித்தோம். இப்பொழுது அவர்கள் கலகம் அமைச்சலானது.

### ஒருகதை.

ஆரோ களவெடுத்திருக்க, நரி களவெடுத்ததென்று ஒரு கோணாய் சமாதான நீதவானாகிய குரங்கின் சமுகத்தில் முறையிட்டது. நாணி வைத்துப்பேசாமல் வழக்காளியும் எதிரியுமாக தங்கள் வழக்கைத் தாங்களே பேசினது. இரண்டும் தங்கள் நியாயத்தை நீதவானாகிய குரங்குக்குச் சொன்னதின்மேல் குரங்கு அவைகளை நோக்கிச் சொன்னதாவது, என் சிநேகிதரே, உங்கள் காரியங்களை வரையறவாகக் கவனித்துக் கேட்டேன். உங்களுக்குச் சிட்சிக்கினை பண்ணவேண்டிய குற்றமல்லாதிருந்தும் இரண்டுபேருக்குங் குற்றம்போட வேண்டியது. உங்கள் நடையைப்பற்றிச் சகலருமறிந்தபடி துஷ்டராயிருக்கிறீர்கள். உங்களை நல்லவரென்று சொல்வார் ஒருவருமில்லை. இப்பொழுது கோணாயுடைய தாடி இரத்தக்கறைகளால் நிறைந்திருப்பதையும் நரி களவெடாதிருந்தும் வாய்க்குள் கோழிக்குஞ்சிருக்கிறதையுங் காணும்பொழுது சுத்தவாளிகளென்று சொல்ல இடமில்லை. கெட்டபேரை எடுத்தவர்கள் குற்றஞ்செய்யாதபொழுதும் அந்தக் குற்றத்துக்காக ஆக்கினைப்படுவது ஆச்சரியமல்லவென்று சொல்லிற்று. இக்கதையின் போதனையென்ன? கெட்டபேரை நாம் எடுத்துக்கொள்ளப்படாது. ஏனெனில், பிறருடைய குற்றத்திற்காக நாம் ஆக்கினைப்படவேண்டிவரும். ஒருவன் பொய்யனாகவிருந்தால் அவன் சத்தியத்தைப்பேசியும் நம்பார்கள். எவ்விடத்திற் களவுபோனாலும் முன் களவெடுத்தவனையே சாட்டுவார்கள். ஆகையால் நற்கீர்த்தியைச் சம்பாதியுங்கள்.

### எதிரொலி.

பிள்ளைகளே, எதிரொலி இன்னதென்றறிவீர்களா? சகலமும் அமைதியாகவிருக்கையில் சில வீடுகளுக்கருகில் அல்லது மலைகளில் நாமும் சத்தமிட்டால் அந்தச் சத்தம் போல மறுபடியுஞ் சத்தமிட்டவனுக்குக் கேட்கப்படும். எதிரொலி இன்னதென்றறியாத ஒரு பிள்ளை ஒருமுறை மலையில் அலைந்து திரிகையில் உரத்த சத்தமிட்டான். அந்தச் சத்தம்போல மறுபடியும் அவன் காதிற் தொனிக்க, ஆரடா என்னைப் பரிகாசம்பண்ணுகிறவனென்று சினந்துப் பேச மறுபடியும் அந்தச் சத்தம் போல அவன் காதிற் கேட்க, பேசாதபடி ஓடி உலாவிப்பார்த்து, ஒருவரையுங் காணாததினால் வக்கணைசொல்லிப் பட்டந்தரித்தான். அவன் சொல்லிய வக்கணைகளும் பட்டங்களும் மறுபடியும் அவன் காதிற்கு எட்டினது.

உடனே அவன் வீட்டிற்குத் திரும்பித் தனது தாயிடம் ஆச்சி, மலையில் ஆரோ என்னைப் பகிடிபரிகாசம்பண்ணி, திட்டி ஏசினான்; ஆரென்று தேடியுங் காணவில்லை என்க, உடனேதாய் பிள்ளையின் கையைப் பிடித்து மகனே நீபேசின வார்த்தைகளே, திரும்பவும் எதிரொலியாக உன் காதில் விழுந்தது. மறுபேர் உன்னைப் பேசி ஏசவில்லையென்றாள். மகனே நல்லவார்த்தைகளை நீ சொன்னால் திரும்பவும் உன் காதில் நல்லவார்த்தைகளே தொனிக்கப்படும். உன் இருதயத்திலுள்ளவைகளை உன் வாய் பேசுகிறது. அது எதிரொலிக்குச் சரி. நீ மற்றவர்களுக்குக் கடுஞ்சொல்லாகவும் நயமில்லாமலும் பேசுவாயாகில் அவர்களும் அப்படியே பேசுவார்கள். நீ மற்றவர்களுடன் அன்பாகப் பேசினால்

அவர்களும் அன்பாகப் பேசுவார்கள். பிள்ளைகளே, எதிரொலி நல்வாக்குகளைப் பேசும்படி கற்பிக்கிறது.

## எட்பிரமாணம் விலகல்.

காறு பக்கமும் கற்பாரிருக்க சரியான துறைமுகஞ் சேர்வதற்கு ஒரு சிறு வாய்க்காலிருந்தது. ஒரு கப்பலானது வாய்க்காலை நோக்கி வருகையில் சுக்கானியின் அசட்டையால் எட்பிரமாணம் விலகினது. அதினாற் கப்பல் கற்பாரில் மோதி முழுவதும் நாசப்பட்டுப்போனது. ஆனாற் சுக்கானி நான் என்ன செய்ய, என்னுப்போலேதானே விலகினதென்றான். எவ்வளவு விலகினதால் கப்பலுக்குஞ் சாமானுக்கும் மனுஷருக்கும் பெருமோசமுண்டாகவில்லையா?

பிள்ளைகளே, இவ்வுலகத்தில் நீங்கள் காலம் விடவேண்டியவர்கள். தேவன், போதகர், இராசா, பெற்றோர், உவாத்திமாரின் கட்டளைக்கு என்னுப்போலே விலகினேமென்று சொல்லாதேயுங்கள். அப்படிச் சொல்லுகில் கப்பலுக்கு நேரிட்ட காரியந்தான் உங்களுக்குஞ் சம்பவிக்கும். உங்கள் கூட்டாளிகளார்? உங்கள் கைகளிலிருக்கும் பொத்தகம் என்ன? மயிர்விலகை மலை விலகுமல்லவா? அதுபோல எள்ளிடை விலகினால் நீயோன் மலை விலகும்.


பெற்றோரே, உங்கள் பிள்ளைகள் செய்த சிறு குற்றங்களைக் குறித்து என்ன செய்கிறீர்கள்? துரும்பு தூணோதா. சத்தியவேத புத்தகத்தில் சிறு குற்றங்களைத் தேவன் விசாரியாரென்று சொல்லியிருக்கிறதா? பிள்ளைகள் செய்த குற்றங்கள் எவ்வளவுதான், இதற்கு நாம் என்னசெய்கிறதென்று சொல்லாதேயுங்கள், சரியான வாய்க்காலுக்கு எட்கிடை சுக்கானி கப்பலைவிலக்கினதால் என்ன நேரிட்டதென்று சிந்தியுங்கள்.

## தற்பொழிவாவதேன்ன.

ஒரு நாயும் பூனையும் எச்சிற்கல்லை போடுமிடத்தில் சேடங்களைத் தின்னும்படியாகக் காத்துநின்றது. கல்லைகள் எறிந்தவுடன் இரண்டும் அவ்விடத்திற்கு ஓடின. பூனையிலும் நாய் வலியனானதால் பூனையைக் கலைத்துவிட்டு எல்லாச் சேடத்தையுந் தானே தின்றது. நாய் பூனைக்குக் கொடுக்கும்படி எண்ணாமற் தானே தின்றது. இதுவே தற்பொழிவு அல்லது தற்சினேகம். நாய்க்கு வேண்டியதுபோலப் பூனைக்கும் வேண்டியது. அதை நாய் சிந்திக்கவில்லை. வலிமையால் எடுத்தது. இது குற்றமா? இல்லை. நாய் அறிவற்றது. அது நன்மை தீமை பகுத்தறியமாட்டாது. மற்றவர்கள் உனக்குச் செய்யவிரும்புவதை நீயே மற்றவர்களுக்குச் செய்யென்ற பொற்பிரமாணத்தை அறியாது.

ஆனாற் பிள்ளைகளின் தன்மை வேறே அவர்கள் ஒழுங்கும் வேறே. கடித்துப் பிடுங்கி எடுப்பதற்குப் பதிலாக அவர்கள் சாதுவும் பட்சமுமுள்ளவர்களாக ஒருவர்க்கொருவர் நடக்கவேண்டும். நாயைப்போற் தற்பொழிவுள்ளவர்களாகவிராமல் திதார்த்தமும் அன்புமுள்ளவர்களாகவிருக்கவேண்டும். மற்றவர்களுக்குச் செல்லவேண்டியதைச் செலுத்தி பிறருக்கு அவசியம்வேண்டியவைகளை தங்களாற் கூடுமாகில் கொடுத்து உதவவேண்டும். தன்னுடையதல்லாததை ஒரு பிள்ளை மற்றொரு பிள்ளையிடம்பறித்தால் அவன் தற்பொழிவுள்ளவனும் பொல்லாதவனுமாயிருக்கிறான். வேறொருவனிடமிருப்பதை உபாயமாகப் பெற்றுக்கொள்ள எண்ணுகில் அது தற்பொழிவு. களவுக்குச் சரி. தற்பொழிவு தனக்காகக் கவலைகொள்ளுதல், அது கெட்டகுணம். அதற்கு ஒவ்வொரு பிள்ளையும் விலகவேண்டும். தற்சினேகமுள்ளவன் ஒருபொழுதும் நல்லவனும் மனச்சந்தோஷமுள்ளவனுமாய்ப் பிறரால் நேசிக்கப்படுகிறவனுமாயிரான்.

ஒவ்வொருவரும் தனக்காக மாத்திரங் கவலைப்படுகில் ஒவ்வகை கிற்பந்தம் உலகத்திலிருக்கும். பிள்ளைகளும் முதியோரும் நாயையும் பூனையைப்போலத் தங்களுக்காகக் கவலைகொள்ளுகில் நேசத்தில் எவ்வளவு சண்டையும் அடிபிடிகளும் உண்டாகும். அண்ணனுந் தம்பியும் அக்காளுந் தங்காளும் மயிர்பிடித்திழுத்து எவ்வளவு சண்டைபோடுவார்கள். மிருகத்திலும் மேலான தன்மையைத் தேவன் நமக்குக் கொடுத்திருப்பதற்காக நாம் ஒருவரிலொருவர் பட்சமாயிருந்து அவரைத் துதிப்போமாக.



## புலி.

மேற்காணப்படும் மிருகம் என்ன. அதைப் பார்க்கையில் பூனையின் சாடையாகவிருக்கிறது. ஆனாற் பூனையல்ல, புலி என்பார்கள். புலிவகையில் பலவினமுண்டு. அவையாவன, கொடிப்புலி, கழுதைப்புலி, சிறுபுலி, சிறுத்தைப்புலி, பெரும்புலி, வேங்கைப்புலி என்பவைகளே. ஆசியாத்தேசத்தில் பிரதானமாக இந்தியாவில் புலிகள் மிகுதி. நமது தேசத்தில் நடமாடுவது சிறுபுலி என்பார்கள். இவைகள் காடுகளில் வசிக்கின்றன. பகற்காலங்களில் மிகவும் அருமையாக வெளிப்படும். இராக்காலங்களில் தங்கள் இஷ்டப்படி சஞ்சரிக்கும். ௲௮௱௭௰ ம் ஆண்டளவில் கனம். பேரி (Rev. J. S. Perry) ஐயர் வட்டுக்கோட்டையைச் சார்ந்த அராலியில் ஒரு புலி சுட்டார். சிறிது வருஷங்களுக்குமுன் பருத்தித்துறைக்கு மஜிஸ்திரேத்தாகவிருந்த லீசிங் (L. Leisching, Esq.) துரை வடமராட்சிப்பகுதியில் ஒரு புலிசுட்டார் இக்காட்களில் ஒருபுலி வல்லைவெளியிற் காணப்பட்டு சில மாடுகளைக்கொன்று பின் தென்மராட்சியைச்சேர்ந்த மறவன்புலோ என்னுங் குறிச்சியில் இரண்டு மனுஷரை ஊறுபடுத்தி மறைத்து நிற்கிறது. புலிகள் இரத்தத்தில் மிகப்பிரியமுள்ளவைகள். புலித்தோல்களை மிகவும் பரிசுத்த ஆசனமாக இந்துதேசத்தார் எண்ணுகிறார்கள். தவசி, சந்நியாசி முதலியவர்கள் தங்கள் கமுக்கட்டில் இடுக்கிக்கொண்டுதிரிந்து தாங்கள் உட்காரவேண்டிய இடங்களில் அதை விரித்து உட்காருவார்கள். வருஞ் சஞ்சிகையில் பெரும்புலி அல்லது வேங்கைபபுலியைப்பற்றிச் சிலகாரியஞ் சொல்வோம்.

## நேர்மை நன்னெறி.

பிள்ளைகள் கல்லுவிட்டெறிந்து விளையாடுவது வாடிக்கை. இரண்டுபிள்ளைகள் இவ்விதமாக விளையாடுகையில் ஒருபிள்ளை விட்டெறிந்த கல்லு ஒரு துரைமகனுடைய சாளரத்திலிருந்த கண்ணாடியை உடைத்துப்போட்டது. உடனே மற்றப்பிள்ளை ஏனடா கள்ளப்பயலே இப்படிச்செய்தாய்? ஏன் நிறுதிறென்று பார்க்கிறாய்? எப்படி இதற்குப் பணமிறுக்கப்போகிறாய்? உன் பிதாவும் வேலையில்லாமல் இருக்கிறதே என்று ரோபித்துப் பேச, மற்றப்பிள்ளை சும்மா என்னைவிடு, கொடு வார்த்தைகளைப் பேசாதே என்று சொல்லி, அந்த வீட்டுக்குச் சென்று காவற்காரனிடத்தில் நான் துரையைக் காணவேண்டுமென்றான். அதற்குக் காவற்காரன் அவரைக் காணக்கூடாது, காரியமிருந்தால் என்னிடஞ்சொல்லு, நான் துரைக்குச் சொல்லுவேனென்க, பையன் அப்படியல்ல, நானே அவரைக் காணவேண்டுமென்றான். இவ்வார்த்தைகள் துரையுடைய காதில் விழுந்தவுடன் கதவைத்திறந்து பையனை இங்கே கொண்டுவா காரியம் என்னவென்று பார்ப்போமென்றார்.

உடனே பையன் அவர்முன் சென்று அமைந்த குணத்துடன், ஐயா, நான் உமது சாளரத்தின் கண்ணாடியை உடைத்துப்போட்டேன். இப்பொழுது என்பிதாவுக்கு வேலையில்லை. அதின் விலைக்கிரயத்தை இப்பொழுது முற்றாகத் தூக்கொள்ள முடியாது, கொஞ்சங் கொஞ்சமாக நீர் என்னிடத்தில் வாங்கினால் மிகுந்த தயவு என்று சொல்லி, தன் கையிலிருந்த இரண்டு பென்சையும் எடுத்து மேசையின்மேல் வைத்தான். உடனே துரை, நீ நேர்மையான பையன், ஆனால் பணத்தைக்கொஞ்சங்கொஞ்சமாகத் தருவாயென்று நான் எப்படிநம்ப, நீ தருமட்டுக்கும் போலீசுக்கு அனுப்பிவிடட்டா என்று சொல்ல, துரையே என்னை அங்கே அனுப்பாதேயும், என் மாதா அறிந்தால்மிகவுந் துன்பப்படுவா, நான் எப்படியும் உமக்குத் தந்து தீர்ப்பேனென்று சொல்லிக் கதறிஅழுதான். அப்பொழுது நல்லது, உன்தாய்க்கும் மனம்நோகுமென்று சொன்னதால் நான் உன்னைநம்பி விடுகிறேன் என்று துரை சொல்ல, பையன் மெத்த உபகாரமென்று சொன்னான். மறுபடி எப்பொழுது வருவாயென்றதற்கு, வரும்வாரம் இந்தக்கிழமையில் இந்தநேரத்தில் வருவேனென்றான்.

தனது வாக்கின்படி பையன் மறுபடி குறித்த தவணையில் துரையின் வீட்டுக்குவந்து இந்தாரும் ஒருசில்லின் என்றான். உடனே துரை இவ்வளவுபணம் சீக்கிரம் பெற்றதெப்படி, நாணயமாகத் தேடினாயா என்க, ஆம் பதினொரு பென்சும் நான் மற்றவர்களுக்கு வேலைசெய்து உழைத்தேன். ஒருசில்லிங்காகும்படி என் தாய் ஒருபென்னி தந்தது, அதினால் ஒரு சில்லிங்கை உமக்குக் கொண்டுவந்தேன் என்றான். பிள்ளையே, உனது முயற்சியும் நாணயமும் எனக்குத் தெரியவருகிறது; ஆனால் உனது ஊரும்பேரும் என்னவென்றார். அவன் தனது ஊர் பேர் சொன்னபிற்பாடு நல்லது அதை எழுதித்தாவென்க, அவன் எழுதினபின் நீ பள்ளிக்கூடத்திற்குப் போகிறியாவென்க, ஆம் என்றான். அப்பொழுது கணக்கதிகாரத்திற் சிலபல கேள்விகளைக்கேட்க, அவன் எல்லாவற்றிற்கும் சரியாகச் சொன்னான். இனிப்போதும் என்று சொல்லி மறுபடி எப்பொழுதுவந்து உன் கணக்குத் தீர்ப்பாயென்க, என் சீவனிருக்கில் வரும்வாரம் இந்தக்கிழமை இந்தநேரத்திற் தானென்றான். என் சீவனிருக்கில் என்று சொன்னதுசரி. சீவனைக் காப்பாற்றுகிறவர்கள் நாங்களல்ல, நீ நல்லாகப் படிப்பிக்கப்பட்டிருக்கிறாய். போய்விட்டுவாவென்று சொல்ல, அவன்போய் மற்றத் தவணையில் ஒரு பென்னிகொண்டுவந்து துரையே, இவ்வாரம் எனக்கு ஒரு வேலையுங் கிடைக்கவில்லை இதை ஏற்றுக்கொள்ளுமென்று சொல்ல, துரைபார்த்து இப்பொழுது என்னிடத்தில் பதினைந்து பென்ஸ் தந்திருக்கிறாய் நீ நல்ல கிரேஸ்தப்பிள்ளை, இன்னும் அப்படி உழைத்துக்கொண்டுவாவென்று சொல்லி, பிள்ளையைப் போகவிட்டினதின்மேல் பிள்ளை பள்ளிக்கூடத்திலிருக்கும் நேரம்பார்த்து அவன் பெற்றோர் வீட்டிற்குப்போய் நடந்தகாரியம் சகலத்தையும் அவர்களுக்குச் சொல்லி, பொடியனுடைய நடை இப்படிப்பட்டதோ என்றார். உடனே தாய் ஆனந்தக்கண்ணீர்சொரிய ஆம் ஐயா, அவன் எப்பொழுதும் சற்புத்திரனும் நாணயமுள்ளவனாகவுமிருக்கிறானென்றாள். பிதாவும் அப்படித்தானென்றான். அதற்குத் துரை அவனைப்பற்றிச் சிலகாரியம் எண்ணியிருக்கிறேன். என்னுடன் அவனைவிடச் சம்மதமா என்று கேட்க, ஆம் அவனுடைய நன்மைக்காக அப்படிச்செய்வோமென்றார்கள்.

உடனே துரை இந்தாருங்கள் இரண்டு கினி. இதைக்கொண்டு அவனுக்குத் தகுந்த உடுப்புவாங்கிக்கொடுத்து இந்தக்கிழமையில் ஒரு நாளில் அவனை என்னிடங் கொண்டுவாருங்கள் அப்பொழுது அவனைப்பற்றி நான் எண்ணியிருக்கும் எண்ணத்தை வெளிவிடுவேனென்று சொல்லிப் போய்விட்டார். அப்படியே பெ

ற்ரும் குறித்தநாளில் அவரிடம்போக அவர் அவனை என்வீட்டுப் பிள்ளையாக வைத்துக் கொண்டேன் இன்னம் பள்ளிக் கூடத்திற்குவிடப் போகிறேன் என்றார். அவர்களும் மிகுந்தசந்தோஷத்துடன் தங்கள் வீட்டுக்குத் திரும்பினார்கள்.

பிள்ளைகளே, இது உண்மையான சரித்திரம். நேர்மையாகவும் காருணியமாகவுமிருப்பது எவ்வளவு மேன்மை. அந்தப் பிள்ளை தான் செய்த குற்றத்தை அறிக்கையிட்டதினாலும் கிதார்த்தமாகத் தன் காருணியத்தைச் செலுத்தினதினாலும் துரையுடைய சந்தோஷத்துக்குள்ளானதுமன்றி அவர்வீட்டிற் பிள்ளையுமானான். தேவனுக்கு கிதார்த்தமுள்ளவர்களாகவும் பாவங்களை அறிக்கைசெய்கிறவர்களாகவுமிருந்தால் அவருடைய சந்தோஷத்துக்குட் பிரவேசித்து அவர் பிள்ளைகளாவோமென்பதை நினையுங்கள்.

## பொறுதியின்மை.

மனிதர் பொறுதியற்றவர்களாக விருப்பதால் சந்தோஷகாரியங்கள் அசந்தோஷமாகின்றன. நயமானவைகள் நஷ்டமாகின்றன. இது காரியத்திற் பிள்ளைகள் மிகுதியாகப் பொறுதியற்றவர்களாகிறார்கள். திஷ்டாந்தப்படுத்துவதற்கு ஒரு கதை சொல்லுவோம்.

ஒருபிதா தனது சிறுபையனுக்கு ஒரு தோடங்காய் கொடுத்து இன்னும் பழுக்கவில்லை; இப்பொழுது செங்காயாகவிருக்கிறது, இரண்டுமூன்றுநாளிற் கனிந்துபோம். அதின்பின் சாப்பிட்டால் நல்ல உருசியாகவிருக்கும், கொண்டுபோய்ப் பழுக்கவையென்றார். பிள்ளை, அப்படியல்ல, இப்பொழுது சாப்பிடவேண்டுமென்றான். இல்லை மகனே, காயாகவிருக்கிறது, சாப்பிட்டால் துன்பம் வரக்கூடும், கசக்கும் தின்னாதே என்றான். இல்லைப் பிதாவே, கசக்கமாட்டாது, நான் தின்னப்போகிறேனென்று சொல்லப், பின்னை உன்பாடு எப்படியாகிலுஞ் செய்யென்றான்.

பிள்ளை உடனே சாப்பிட்டு மற்றநாள் மரணத்திற்கு ஏதுவான துன்பமாக விழுந்தான். இப்படி அவன் துன்பமாக வேண்டியது பொறுதியற்றவனாக விருந்ததினால். பொறுதியுள்ளவனாகவிருந்தால் அவன் தோடம்பழத்தைச் சாப்பிட்டு சௌக்கியமாயிருப்பான், துன்பமாக இருக்கமாட்டான். இவ்விதமாகவே கணக்கற்றபிள்ளைகளும், முதியோரும் தங்களுக்கு வரவேண்டிய ஆரோக்கியங்களையுஞ் சுகங்களையுந் துன்பங்களாகவுஞ் சஞ்சலங்களாவும் மாற்றுகிறார்கள். சாப்பாடுகளால் மாத்திரமல்ல, தங்கள் நடை உடை பருமாற்றம் முதலியவைகளால் கெடுத்துக்கொள்ளுகிறார்கள். சிலர் பொறுதியுடன் தாங்கள் கற்கவேண்டிய வைகளைக் காத்துக் கற்றுக்கொள்ளாமல் தங்கள் கொஞ்சப்படிப்புடன் உத்தியோகம் பெறவேண்டுமென்று பள்ளிக்கூடத்தை விட்டுவிடுகிறார்கள். புளைஊதின பிஞ்சு வாழைக்காய்க்குச்சரி.

## முதற்றேடு.

ஒருசிறுபையன் திருச்சபையிற் சேர்வதற்கு எத்தனித்திருக்கையில் பிதா அவனுடன் பிரியவீனப்பட்டுப் பிள்ளையே, முந்தி ஒருதொழிலைப்பழகு; பின் மார்க்ககாரியத்தைப் பாரென்று சொல்ல, பிதாவே, அப்படியல்ல, "முந்தித்தேவனுடைய இராச்சியத்தைத் தேடுங்கள்" என்று இரட்சகர் சொல்லுகிறார் என்றான்.

பிள்ளைகளே, முதன்முதற் பார்க்கவேண்டியது மேற்குறித்த பிள்ளை சொல்லியதுபோலத் தேவனையும் நமது ஆத்தும ஈடேற்றத்தையும் தேடவேண்டும். அப்பொழுது சகலமுஞ் சரியாகும்.

## பணம்.

பணத்தைத் தகுந்த விதமாகச் செலவிடுகிறவன் அதின் எசமான். அதைப் பத்திரப்படுத்துகிறவன் காவற்காரன். அதை நேசிக்கிறவன் பைத்தியகாரன். அதற்குப் பயப்படுகிறவன் அதின் அடிமை. அதை நமஸ்கரிப்போன் விக்கிராராதனைக்காரன்.



## விதைக்கிறவன்.

பிள்ளைகளே,

நமது ஊரில், கமக்காரர் அந்தந்தப் போகங்களிற் தங்கள தங்கள் வயல்களில் தானியங்களை விதைப்பது உங்களுக்குத் தெரியும். உங்கள் பெற்றார், சகோதரர், இனத்தார்களில் அநேகர் சாமை, குரக்கன், வரகு, நெல்லு முதலியவைகளை விதைக்குஞ் சமயங்களிற் பார்த்திருப்பீர்கள். அவ்வேளையிற் சிலவிதை வரம்பில்விழ, உடனே பட்சிகள்வந்து அவைகளைப் பொறுக்கிப்போடும். சில, கல்லுகளுக்குள்ளும், மேடான இடங்களிலும் விழுந்து, வேர் ஆழமாய்ப் பற்றாததினால் வெய்யிற்பட்டவுடனே தீய்ந்துபோகின்றன. வேறுசிலவோ. நல்லநிலத்தில் விழுந்து ஆழமாய் வேரூன்றி முளைக்கின்றன. அப்போ அவைகளுக்குள்ளே களைகளுங் கூடவளரும். அவ்விதமே முளைக்குங் களைகளைப் பயிருடன் வளரவிட்டால், பயிருக்கு நட்டமுண்டாகும். ஆகையாற்றான் கமக்காரர், சரியான பருவகாலத்தில் களைகளைப்பிடுங்கிப் பயிரை வளரவிடுகிறார்கள். ஆனால் அந்தந்த அவசியமான வேளைகளில் நீர்பாய்ச்சாதுபோனால் அல்லது மழைபெய்யாதபோதில் பயிர்களெல்லாம் வாடித் தீய்ந்து அழிந்து, அநேககாட்களாகப் பட்டபிரயாசங்களெல்லாம் வீணாய்ப் போகின்றன. சரியான வேளைகளில் மழையும்பெய்து, செய்கையுஞ் சரியாய் நடக்குமேயானால், பயிர்கள் நன்றாய் வளர்ந்து, கதிர்பிடித்துத் தானியஞ் சிறப்பாய் விளைந்து, தகுந்தகாலத்தில் தன் எசமானுக்கு வேண்டிய பலனை அதிக மடங்காய்க் கொடுக்கின்றன. இவ்விதமான இந்தச் செய்கையை, எங்கள் இரட்சகர் ஒரு உவமையாக எடுத்துப்பேசினார். மேலே காட்டப்பட்டிருக்கிற இந்தப்படம் அந்த உவமையைச் சுட்டியது. பாருங்கள், ஒருமனுஷன் இரண்டு எருதுகள் பூட்டப்பட்ட ஒரு கலப்பையைப் பிடித்து உழுதுகொண்டுபோக, வேறொருமனிதன் அவனுக்குப் பிறகாலே ஏதோ தானியம் விதைத்துக்கொண்டு போவதையுங் காண்கிறீர்கள். அவனுக்குப் பின்புறத்தில் சில பட்சிகள் பறந்து பறந்து என்னசெய்கிறதென்று பாருங்கள். அவன் விதைத்துப்போகுந் தானியத்தில், மண்ணுக்குள் மறைக்கப்படாமல் வெளியிற் காணப்பட்டவைகளை அந்தப் பட்சிகள் பொறுக்கிக்கொண்டு பறந்துபோகின்றன. இந்த உவமை நல்ல ஒரு பயன்கொண்ட உவமை. மத்தே. ௧௩. அதிகாரத்தில் இந்த உவமையும், இதன் தாற்பரியமும் சொல்லப்பட்டிருக்கின்றன.

பிள்ளைகளே, இச்சிறு நேசனை வாசிக்கிறவர்களாகிய நீங்கள் அனைவரும், ஓய்வுநாட்களிலும், மற்றுந்தினங்களிலுந் தேவவார்த்தைக் கேட்கிறவர்களென்று நம்புகிறேன். பின்னை நீங்கள், இந்த உவமையிற் சொல்லப்பட்ட எந்த நிலத்திற் கொப்பாயிருக்கிறீர்கள்? நீங்கள் தேவவார்த்தைக் கேட்கும்படி போகும்போது எவ்வித நோக்கத்துடன் போகிறீர்கள்? உங்கள் அலங்காரமான உடுப்பையும், பழுபழுப்பான ஆபரணங்களையும், மற்றவர்களுக்குக் காட்டும்படியாகப் போகிறீர்களா? அல்லது சும்மா அங்குள்ள காட்சிகளைக்காணவா? அல்லது நீங்கள் நல்ல நோக்கத்துடன் தேவவார்த்தைக் கேட்கும்படி போனீர்களென்று நம்பிக்கொள்கிறோம். திரும்ப ஆலயத்திலிருந்து எவ்விதமாய்ப் புறப்பட்டு வருகிறீர்கள்? ஆலயத்தில் வந்திருந்த ஏழைகள், சீர்சிறப்பற்றவர்கள், அங்கக்குறைவுள்ளவர்களைக் கவனித்துப்பேசி, நகைசெய்துகொண்டு வருகிறீர்களா? அல்லது மெய்யாகவே, நீங்கள் கேட்டவார்த்தைக் குறித்து யோசனை பண்ணிஆராய்வுடன்வருகிறீர்களோ நீங்கள் ஆலயத்திலிருந்து கேட்டவார்த்தை உவமையிற் சொல்லப்பட்ட பட்சிகளைப்போலப் பிசாசானவன் வந்து கவர்ந்து கொண்டுபோய்விடப் பார்ப்பான். அதற்குத் தப்பினால், உபத்திரவமும், துன்பப்படுதலுமுண்டாகும்போது அதிலிருந்து விலகுந்தக்கதான சோதனைகளுண்டாகும். ஆனால், பரிசுத்தாவியின் உதவியை அதிகமாய்த் தேடுங்கள். அப்போது அவர் உங்களுக்கு உதவிசெய்வார். இதுவுமன்றி மழையில்லாதுபோனால் பயிரானது வாடித் தீய்ந்துபோவதுபோல, இருதயத்தில் வளருந் தேவவார்த்தைக்கும், பரிசுத்தாவியின் அருளென்னும் மழையில்லாதிருக்குமேயாகில் அந்த விதை, தீய்ந்து அற்றுப்போய் விடும். ஆகையாற் பிள்ளைகளே, உங்கள் விரோதியாகிய பிசாசானவன், கெர்ச்சிக்கிற சிங்கம்போலத் திரிந்து, உங்கள் இருதயத்தில் விதைக்கப்படும் விதைகளைப் பொறுக்கிக்கொண்டு போகாதபடிக்கும், தேவவசனமென்னும் விதை, உங்கள் இருதயத்தில் வளரும்போது, லௌகீகக் கவலையும், பொருள்மயக்கமும் எழும்பி அவைகளை நெருக்கிப்போடாதபடிக்கும் விழித்திருந்து அதிக வேண்டுதலையுடனே பிரார்த்தியுங்கள். நல்லநிலத்தில் விழுந்த விதையைப்போல நீங்களும் நல்லபலனைக் கொடுக்கும்படி எச்சரிக்கையாய் நடவுங்கள்.

## ஒரு தியானம்.

நூறுகோடி சனங்கள் பூமியிலிருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு இருதயமுண்டு. ஒரு நிமிஷத்துக்கு எழுபதுதரம் இருதயம் துடிக்கின்றது. இத்துடிப்பினால் சரீரம் அடங்கலும் இரத்தம் ஓடுகின்றது. அதினாற் சீவன் காக்கப்படுகின்றது. ஒவ்வொரு நிமிஷமும் எழுபதுதரம் இருதயத்தைத் துடிக்கச்செய்து இரத்தாசயத்திலிருந்து இரத்தநரம்பு வழியாக நூறுகோடி சனங்களுக்கும் இரத்தம் ஓடப்பண்ணும் வல்லகடவுள் எவ்வளவு வல்லமையுள்ளவரென்பதைத் தியானி.

## பூமிசாத்திரக் கேள்வி.

௧. ஆசியாவிலுள்ள பிரதான சங்கிலித் தொடர் மலைகளென்ன? தோறஸ், எல்பர்ஸ், இந்துகுஸ், இமயம் என்பவைகளும், சாயன்ஸ்கோபி, யாபினோவோய், ஸ்தானுவோஸ் என்னும் அல்த்தே மலைகளும், ஐரோப்பாவுக்கும், ஆசியாவுக்கும் எல்லையாகிய யூறல் மலைகளும், கறுத்தக் கடலுக்கும் கஸ்பியன் கடலுக்கும் நடுவிலிருக்கும் கோகேசஸ் மலையுமே.

௨. வடசமுத்திரத்துக்குட் பாயும் மூன்று பெரிய நதிகளென்ன?

௩. பாசிபிக்குச் சமுத்திரத்துக்குட் பாயும் நாலு நதிகளுமென்ன?

௪. இந்து சமுத்திரத்துக்குட் பாயும் நாலு நதிகளுமென்ன?

௫. கோகங்கோ, கையங்கியு, சமபோதியா இராவாடி, கங்கை, இந்து என்னும் நதிகள் எவ்விடத்திலிருந்துண்டாகிறது?

௬. இவைகள் எத்திசைகளாக ஓடுகின்றன?

௭. கஸ்பியனுக்குள் பாயும் ஆறென்ன?

௮. ஆரல் கடலுக்குள் பாயும் இரண்டு ஆறுகளுமென்ன?

௯. சீனதேச சாம்ராச்சியத்திலிருக்குந் தேசங்களென்ன?

௰. தமிழ்த்தேச உஸ்மானிய தேச சாம்ராச்சியத்திலிருக்குந் தேசங்களென்ன?

௰௧. உஸ்மானிய தேசசாம்ராச்சியத்திலிருக்குந் தேசங்களென்ன?

L. M.
"O happy day that fix'd, my choice."

## நன் நிண்ணயம்.

௧. யேசுவைப் பற்றிக்கொண்ட நான்
சந்தோஷமான தினமே,
என் நெஞ்சங் களிகூர்வதால்
என் சீவன் பூர்த்தியாகுமே.

௨. பூரண அன்பின் முத்திரை
என் நெஞ்சிலே பதித்திடும்,
நம்பிக்கையின் பொருத்தனை
என் உள்ளத்தில் வரைந்திடும்.

௩. முடிந்தது,—நைவேத்தியம்,
தந்தேன்,-மா தாழ்மையுடனே;
பின் செல்வது மாபாக்கியம்,
கண்டால், அல்லோ ?-என் பூர்த்தியே.

௪. என் நெஞ்சே, ஆறல்கொண்டிரு,
இளைப்பில்லாமல் வாழலாம்,
ஆனந்த இன்பம் உனக்கு
உரிமையாகும், என்றும் ஆம்.

௫. நாள்தோறும் என் பொருத்தனை
சுத்தோர்கள் கேட்பார் என்றுமாய்
சா வந்தும் மோட்ச மாளிகை
கிடைக்கும், யேசுவழியாய்.

## சத்தியவேதக்கேள்வி.

௨ம் பாடம்.

சாஸ்திரிகள் யேசுவை வணங்குதல்.

மத். ௨: ௧—௭, ௯—௰௧.

௧. யேசு பிறந்தபொழுது பெருஷலேமுக்கு வந்ததார் ?
௨. வந்து என்ன சொன்னார்கள் ?
௩. யூதரின் இராசாவென்று ஆரைக் குறித்துச் சொன்னார்கள் ?
௪. என்ன கண்டோமென்றார்கள் ?
௫. ஏன் அவரைக் காணவிரும்பினார்கள் ?
௬. சாஸ்திரிகளின் வாக்கைக் கேட்டபொழுது ஏரோது எவ்விதமாகவிருந்தான் ?
௭. ஏன் கலங்கினான் ?
௮. என்ன விசாரித்தான் ?
௯. மகா ஆசாரியர் முதலானவர்கள் அவர் எங்கே பிறப்பாரென்றார்கள் ?
௰. யேசு இருக்கும் இடத்தை அறிய ஏரோது ஏன் விரும்பினான் ?
௰௧. ஏரோது எப்படிப்பட்டவன் ? அவன் மகா கொடூரனும் வஞ்சகனும்.
௰௨. சாஸ்திரிகளுக்கு வழிகாட்டினதென்ன?
௰௩. யேசுவைக் கண்டார்களோ ?
௰௪. கண்டு என்ன செய்தார்கள் ?
௰௫. அவர்கள் கொடுத்தவெகுமதிகளெவை?
௰௬. நீயும யேசுவை நமஸ்கரிக்க மனமா ?

## நாக்கு.

ஒவ்வொரு பிள்ளையும் பேசும்படிக்கு வாய்க்குள் நாக்கு இருக்கின்றது. சத்தியத்தைப் பேசும்படிக்கே கொடுக்கப்பட்டது. பொய் பேசும்பொழுது அதிக தீமையை உண்டாக்குகின்றது. நமது சிநேகிதருடன் பட்சமாகவும் இன்பமாகவும் பேசும்படி நாவுண்டானது; அதை குறும்பாகப் பேசினால் கெட்ட நாக்கென்னப்படும். பெற்றாருக்கு அல்லது பெரியோருக்குக் கீழ்ப்படியாத வார்த்தைகளைப் பேசினால், பொல்லாத நாக்கென்பார்கள். சகோதரர் சகோதரிகளுடன் கடுகடுப்பாகப் பேசினால் தீய நாக்கென்பார்கள். நா சத்தியம்பண்ணும்போது தேவ கட்டளையை மீறுகின்றது. அசப்பிய வாக்குகளைச் சொல்லுகையில் அசுத்த நாக்கென்பார்கள்.

இப்படிப்பட்ட நாக்குகளை தங்கள் வாயில் வைத்திருக்க விரும்புகிறதார்? வாசிப்பவனே உன்னிடத்தில் சில கேள்வி கேட்கிறோம். உனது நா எப்படிக்கொத்தது? சத்தியத்தை எப்பொழுதும் பேசுகிறதா? தகுதறும்பான வார்த்தைகளைப் பேசவில்லையா? பெற்றாருக்குக் கீழ்ப்படியமாட்டேனென்று உனது நா சொல்லவில்லையா?

ஆ பிள்ளைகளே, உங்கள் நாக்கு தகாத பேச்சுகளைச் சொன்னால் என்ன செய்கிறீர்கள்? அதைத் திருத்தத் தெண்டிக்கிறீர்களா? நாவைப் பேணுங்கள் முறைகேடான பேச்சுகளைப் பேசாமற் காருங்கள்.

## சூரியனுங் காற்றும்.

சூரியனும் காற்றும் தங்கள் வலிமையைக் குறித்துதருக்கம்பண்ணினது. சூரியன் பனிக்கட்டிகளை உருக்கி பயிர்களை நிலத்திலிருந்து முளைக்கச் செய்து பூமிக்கு வேண்டிய ஒளியையுங் காந்தியையுங் கொடுப்பதால் தானே அதி வலிமையுள்ளதென்று சொல்லி இன்னுஞ் சொன்னது காற்றே, நீ பெரும் இரைச்சலுண்டாக்குவாய்; ஆனால் நானோ அதி சத்துள்ளவைகளை நடப்பிக்கிறேன். ஆரவாரம்பண்ணுவோர் அருஞ் செய்கைகளைச் செய்கிறதில்லை என்றது.

காற்று சூரியனை நோக்கி நீ சொன்னது சரியாகத்தோன்றினாலும், காரியம் அப்படியல்ல, கடல்களில் கப்பல்கள் பாய்வலித்தோடும்படி நான் செய்யவில்லையா? வாயுவினாலியங்கும் இயந்திரங்களில்லையா? முகில்களை வாரிக்கொண்டு போகவில்லையா? புயல்களையுங் கடுங்காற்றுக்களையும் உண்டாக்கவில்லையா? கோபுரங்களையும் வீடுகளையுங் கவிழ்த்துவிடவில்லையா என்றது.

இப்படி இருவருந் தர்க்கம்பண்ணும்பொழுது ஒரு மனுஷனைக் கண்டு நாங்கள் எங்கள் காரியங்களை இம் மனுஷனில் நடப்பிப்போம்; அவன் எங்கள் செய்கைகளைப்பற்றி தீர்மானிக்கட்டுமென்றன. உடனே காற்றானது அவன்மேல் மோதி அவனுடைய தலைப்பாவையும் துப்பட்டாவையும் அள்ளி அப்புறங் கொண்டுபோய் அவனும் நடந்து முன்னேறிச் செல்லாதபடி அவனை எதிர்த்து பின்காட்டும்படி தள்ளினது. இவ்விதமாகக் காற்றுத் தன்னாற் செய்யக்கூடியதெல்லாவற்றையும் செய்தபின்மேல் சூரியன் தனது கோடைகாலக் கிரணங்களை மெதுவாக அந்த மனுஷன்மேற் செலுத்த அதிகம் உருகித்து வெயர்வை தோன்றினதால் அவன் தனது தலைப்பாவையும் அங்கவஸ்திரத்தையும் கழற்றி காற்றிலுஞ் சூரியனே அதி வலிமையுள்ளதென்றான்.

புயலிலும் அமைதியாகக் காலுங் கிரணமே மிகவும் சத்துள்ளது. வலோற்காரமாக எந்தக் காரியத்தையும் நடப்பிப்பதிலும் சாதுவாக நடப்பிப்பதே அதி பெலனுள்ளது. மெல்லெனப் பாயுந் தண்ணீர் கல்லையும் உருவப்பாயும் என்பதால் கடுகடுப்புச் சடசடப்புக்கொண்டு ஒரு காரியத்தைச செய்து முடிப்பதிலும் அன்பான வார்த்தைகளுடன் செய்து முடிப்பதே சித்தியாகும்.

## இருந்தும் பலனென்ன இறந்தும் பலனென்ன?

ஓ! அறிவு நிறைந்த பாலியரே?

நமது மனம் போன போக்கின்படிக்கு பொய், களவு, சூது முதலான அக்கிரமச் செயல்களை நடத்தி "சின்னத்தங்கச் சிந்து" முதலாகிய அரோசிகமான பாடல்களைப் பாடி ஒருவருக்கும் கீழ்ப்படிதலில்லாமல் இந்த உலகத்தின்கண் வாழ்வது நலமோ? அல்லது "காய்க்கொருவேலையுமில்லையுழுக்கார்ந்திருக்க நேரமுமில்லை" என்பது போல ஒய்ந்து உலாவித்திரிந்து விளையாடக் கிஞ்சமும் நேரமில்லாமல் பாடசாலைக்குப் போய்ப் படிக்கவும், பாடங்கள் தெரியாதுபோனால் அடிபடவும், இவ்விதத் தொல்லையுடன் படித்துத் தெளிந்தால் அப்போதாவது ஒய்ந்து சுகமாக உலாவக்கூடாமல் மாடுபோல் உழைத்துத் தாய் தந்தை முதல் சுற்றத்தாருக்கு சமரட்சணை செய்யவேண்டும். இவ்விதமான துன்பப்படுவதிலும், இறந்துவிடலாமென்று நாடுவது நலமோ?

ஆ! பாலியரே? மேற்கூறியவாறு உலகத்திலிருப்பது நலமென்றால் ஐயோ! நாம் பேசுகிறதிலும், பார்க்கிறதிலும், எண்ணுகிறதிலும், நடக்கிறதிலும், எண்ணப்படாத பாவச் சுமையைச் சேகரிக்கிறோமே. இதைவிட்டு இறப்பது நலமென்றால் நாம் செய்த பாவத்துக்காய் தேவனால் தண்டிக்கப்படுவோமே? ஆகையால் செய்யவேண்டிய உபாயமென்ன? உங்கள் அறிவுக்குப் பலவாறாய்த் தோற்றினபோதிலும், எனக்குத் தோன்றியதைக் கிஞ்சம் வரைகிறேன் சற்றுக் கவனிப்பதுங்கள் பாரம். எவ்வாறெனில்,

சருவ வல்லமைபொருந்திய கடவுளால் சிருட்டிக்கப்பட்டவைகளில் மனிதரை மிக்க மேன்மையாய்ச் சிருட்டித்தார். மனிதர்களுக்குப் பூரணமான அறிவையும், இம்மையிலும், மறுமையிலும் புகழைத் தந்தார். தன்னை அறிந்து உய்யும்பொருட்டு ஒப்பில்லாத வேதமும் அளித்தார். அடங்காத சீவப்பிராணிகளை அடக்கும்படிக்கு வல்லமையுமளித்தார். அலங்கிர்தமாக உடுத்த பட்டுபட்டாடைகளும், கண்கூசும்படிக்கணிய பொன் முதலாகிய லோகங்களும் முத்து முதலாகிய நவமணிகளுமளித்தார். இவ்வாறு நம்மை மேன்மைப்படுத்தியிருக்கத் தாழ்மையான மிருகம்போல அவரைக் கிஞ்சமும் நினைத்து அவர் செய்த நன்றிக்குப் பிரத்தியாக மனம், வாக்கு, காயம், ஒத்து துதிசெய்யாமலும், தந்தை, தாய், தமையன், மாமன், பாட்டன், முதல் பெரியோர்களுக்குக் கீழமைந்து வாழாமல், புத்திசொல்வோரைப் பகிடிசெய்து, விடுபட்ட காளையைப்போற்றிரிந்து, ராகம், துவேஷம், காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மச்சரம், ஈரிஷை, அசூயை, டம்பம், தர்ப்பம், அகங்காரம், என்ற துர்க்கிரியையைச் செய்து, மோட்ச பங்கை விட்டு, பார்ப்போருங் கேட்போரும் திட்டனென்றும், மட்டியென்றும், தறுதலையென்றும் பேச, கடவுளும் நம்மேல் வைத்த அன்பை மாற்ற உலகத்தில் இருந்தும் பலனென்ன? இறந்தும் பலனென்ன?

அவ்வாறில்லாமல், "இளமையிற்கல்" "ஓதுவதொழியேல்" "எண்ணுமெழுத்துங் கண்ணெனத்தகும்" என்று ஔவை சொல்லியதுபோல இளமையிலே பேதமையான கல்வியைக் கல்லாமல் ஒழுங்குடன் கற்று, கடவுளடியைச் சதாகாலமுந் தொழுது, தாய், தந்தை முதலாகிய பெரியோர் சொல்லுக்கமைந்து, மேட்டிமையென்னும் பேயை அகற்றி வாழ்வோமாகில், உலகத்திலிருந்தும் பலனுண்டு கடவுளின் சித்தத்தின்படிக்கு இறந்தும் பலனுண்டு.

ஆ! எனது கண்மணிக்கிசைந்த பாலியரே, இதைக் குறித்து தனித்தனியாக யோசித்துப்பார்ப்பீர்களாக.

இப்படிக்கு, சிங்கப்பூர் சராங்கோங்ரோட்டானென்னும் பாலியர்பிறியன்.

## சிங்கப்பூர் கையொப்பக்காரருக்கு.

௧. நேசனுக்குச் செலுத்தவேண்டிய பணங்களை சிங்கப்பூர் தி. தி. வே. நாராயணசாமி நாயக்கரிடஞ் செலுத்திப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளவும். அவர் கிரமமாகப் பத்திரிகை சேரும்படி செய்வார்.

௨. பத்திரிகை நிறுத்தப் பிரியமுள்ளவர்கள் மேற்படியாரிடம் மூன்று மாதத்திற்கு முன் அறிவிக்கவேண்டும்.

௩. பாலியருக்கு உபயோகமான கடிதம்எழுதுவோர் நேரே நமக்குஅனுப்பலாம். [பா. பத்.]

Printed and Published for the Youth's Christian Association, by N. Strong, at the Press of Ripley & Strong, Manepy, Jaffna.